**World Anatomy Day - இன்று உலக உடற்கூறியல் தினம்.**

நான் மருத்துவர். பிரியதர்ஷினி உடற்கூறியல் துறை, ஶ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி.

உடற்கூறியல் - Anatomy இது மருத்துவத் துறையின் அடிப்படை அறிவியல்.

மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறையில் பயில்வோருக்கு நுழைவாயில். இத்துறையின் ஆணிவேராக இயங்குவது மனித உடல். இம்மனித உடலை பதப்படுத்தி, கூறிட்டு, பல்வேறு உறுப்புகளின் அமைப்பு சார்ந்த அறிவு பயிற்றுவிக்கப்படுகிறது.

ஆங்கில மருத்துவத்தின் ஆரம்ப காலத்தில் Andreas Vesalius எனும் ஐரோப்பிய மருத்துவர் மனித உடலை ஆய்வுக்காக பெற்று அவைகளை கூறிட்டு மருத்துவ அறிவியலுக்கு வலிமை சேர்த்தார். அவரது நினைவாக World Anatomy Day அனுசரிக்கப்படுகிறது. இன்றளவும் எந்த ஒரு அறுவை சிகிச்சை முறையின் வளர்ச்சிக்கு மையப்புள்ளியாக இருப்பது உடற்கூறியிலே ஆகும்.

நான் மருத்துவர். சுதா உடற்கூறியல் துறை, ஶ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி. இன்று மக்களின் மனநிலை மருத்துவ மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளது அதனால் Voluntary body donation எனப்படும் தன்னார்வ உடல்தான முறைக்கு தங்களை உட்படுத்திக் கொண்டுள்ளனர் இது வரவேற்கத்தக்க செயல். அவ்வாறு பெறப்படும் cadaver என்ற உடல்கள், மருத்துவ அறிவியலுக்கான களஞ்சியம், மருத்துவர்களின் புதிய அறுவை சிகிச்சை முறைகளுக்கான ஊடகம், மருத்துவ மாணவர்களுக்கான வழிகாட்டி. உடல் தானம் உன்னத தானம். மானுடம் சிறக்க மருத்துவம் மேம்பட நாம் இணைவோம் தன்னார்வ உடல் தானத்திற்கு.

நன்றி



Dr.K.V.P.Suriyakumari
Professor & Head,
Department of Anatomy